**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 316 நாள்: 22.07.2026

**திருவொற்றியூர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (22.07.2026) வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம், வார்டு-05க்குட்பட்ட எம்.ஆர்.எஃப். சாலையில் உள்ள வண்டல் வடிகட்டி தொட்டி, வார்டு-04க்குட்பட்ட பகுதியில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், ஜோதி நகரில் உள்ள அம்மா உணவகம், வார்டு-07க்குட்பட்ட கார்க்கில் நகரில் உள்ள நீரேற்று நிலையம், அப்பகுதியில் உள்ள கால்வாய், வெற்றி விநாயகர் நகரில் உள்ள நீரேற்று நிலையம், நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மையம், மாடுகள் காப்பகம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின் போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், சாலையில் தேங்கியுள்ள மழைநீர் மற்றும் வண்டல் வடிகட்டி தொட்டியில் உள்ள வண்டல் மண் அகற்றிடவும், அம்மா உணவகத்தில் தயாரிக்கப்படும் உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாக பராமரித்திடவும், நீரேற்று நிலையங்களில் உள்ள உபகரணங்களை சரிவாரியாக கையாளுவது குறித்தும், மாடுகள் காப்பகத்தினை சிறப்பாக பராமரித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**